முதன்மை சார்பு நீதிமன்றம். விழுப்புரம்

OS.No.801/2018

Witness-DW1

பெயர் – பஞ்சாட்சரம்

த/பெ – துரைராஜ்

இன்று (23.02.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

சத்தியமாகச் சொல்கிறேன்

குறுக்கு விசாரணை

என்னை ஊரில் பணிக்கன் என்று அழைப்பார்கள் என்றால் இல்லை பஞ்சாட்சரம் என்று தான் அழைப்பார்கள். வாதிகள்ராமு மற்றும்உ மாமகேஸ்வரி எனது உடன் பிறந்த சகோதரி என்றால் சரிதான். 3 மற்றும் 4 பிரதிவாதிகளான சித்ரா கற்பகம் ஆகியோர்களும் எனது சகோதரிகள் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதிலட்சுமணன் எனது இளைய சகோதரர் என்றால் சரிதான். வாதிகள் எதற்காக வழக்கு போ்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் பாகம் கேட்டு போட்டுள்ளார்கள். இந்த வழக்கில் 24 அயிட்டச் சொத்துக்கள் காண்பித்து வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். அதில் பூர்வீக சொத்துக்கள் மற்றும் பூர்வீக சொத்துக்களில் வந்த வரு வாய் மூலம் வாங்கிய சொத்துக்களும் அடங்கும் என்றால் சரிதான். நான் இந்த வழக்கிற்கு எனது ஆட்சேபணையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் தாக்கல் செய்துள்ளேன். எனது சாட்சிய பிரமாணப் பத்திரிக்கையில் 1ம் பிரதிவாதி துரைராஜ் என்பவரும் 5ம் பிரதிவாதி ராமநாதன் என்பவரும் சேர்ந்து வசந்தி என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள்என்றா்ல் சரிதான். 5ம் பிரதிவாதி ராமநாதன் என்று எனது ஆட்சேபணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன். 5ம் பிரதிவாதி எனது தாயார் சரோஜா என்பவரிடமிருநது குடும்ப நபர்களுக்கு தெரியாமல் தான செட்டில்மென்ட் பெற்றுள்ளார் என்று எனது பிரமாணப் பத்திரிக்கையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த் சொத்தில் எனக்கும் எனது சகோதரிகளுக்கும் பங்கு உண்டு என்றால் சரிதான். எனது தாயார் சரோஜா தானசெட்டில்மென்ட் எழுதிய விவரம் எனக்கு ஏற்கனவே தெரியுமா என்றால் தெரியும். அந்த தானசெட்டில்மென்ட் பற்றி தெரிந்த பிறகு வக்கீல் வைத்து கேஸ் போட்டேன்.

அந்த வழக்கு எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. எனது தம்பி 5ம் பிரதிவாதி லட்சுமணன் 20.6.2016 தேதியில் 6ம் பிரதிவாதி கோவிந்தன் என்பவருக்கு அந்த தானசெட்டில்மெண்டில் கண்ட சொத்தில் ஒரு பகுதியை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான் நான் தடுத்தேன் ஆனால் எனக்கு தெரியாமல் கிரையம் கொடுத்துவிட்டார். இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு 5.11.2019 அன்று எனது தம்பி 5ம் பிரதிவாதி இந்த வழக்கின் 4ம் பிரதிவாதி கற்பகத்திற்கு ஒரு பகுதியையும் ஜனார்த்தனன் என்பவருக்கு ஒரு பகுதியையும் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 6.11.2019 அன்று எனது தம்பி 5ம் பிரதிவாதி லோகநாதன் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த லோகநாதன் என்பவர் எனது மகன் என்றால் சரிதான். லோகநாதன் எனது மகன் என்று எனது சாட்சியத்தில் நான் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். கோவிந்தன் ஜனார்தனன் தவிர கற்பகம் மற்றும் லோகநாதன் எனது உறவினர்கள் என்றால் சரிதான். 1ம் வாதி ராமு பெயரில் சிறுவாக்கூர் கிராம எல்லையில் சுமார் 1 ஏக்கர் சொத்து கிரையம் வாங்கி கொடுத்ததாக எனது சாட்சிய பிரமாணப் பத்திரிக்கையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வில்லங்கம் பார்த்தபோது தான் அந்த சொத்துராமுவின் கணவர் தண்டபாணி பெயரில் பதிவாகியுள்ளது தெரியும் என்றால் சரிதான். எனது தந்தையார் எனது தங்கையின் கணவர் பெயரில் சொத்து வாங்கியதற்கான காரணம் என்னவென்று எனது எதிர்வழக்குரையிலோ அல்லது சாட்சியத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. அந்த சொத்துக்கள் ராமு என்பவரின் கணவர் தண்டபாணிக்கு பாத்தியமான தனிப்பட்ட சொத்து நான் வேண்டுமென்றே வழக்கிற்காக எனது தந்தையார் வாங்கி கொடுத்தது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த சொத்துக்கள் வாங்கியதுஎ னக்கு நேரிடையாக தெரியாது தண்டபாணயினி' ரொக்கப் பணமா அல்லது எனது தந்தையாரின் ரொக்கப்பணமா என்று எனக்கு தெரியாது என்றால் தண்டபாணியிடம் அவ்வளவு பணம் இல்லை எனது தந்தையரின் ரொக்கப்பணம் தான். எனது தாந்தையாரின் ரொக்கப்பணம் என்று காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது தந்தையார் அந்த ஆவணத்தில் சாட்சியாக கையெழுத்துட்டுள்ளார் என்றால் சரிதான். எங்கள் அனைவருக்கும் எங்கள் பொது குடும்பச் செலவில் தான் திருமணம் நடந்தது என்றால் சரிதான். 2ம் வாதிக்கு 15 பவுன் நகை நான் போட்டேனா என்றால் நான் சொந்தமாகத்

தான் போட்டேன். நான் சொந்தமாக செய்ய வேண்டிய அவசியம் என்ன என்றால் எனது அப்பாவுடன் சேர்ந்து தான் செய்தேன். 15 பவுன் நகை வாங்கியதற்கு ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எந்த தேதியில் திருமணம் நடந்தது எந்த தேதியில் பவுன் வாங்கினோம் என்று சொல்ல முடியுமா என்றால் அது ஞாபகம் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பி.த.சா.ஆ7 அடமானக் கடன் பத்திரத்தில் நான் தரப்பினர் இல்லை என்றால் சரிதான் எனது தந்தையார் தான் அதில் தரப்பினர். அடமானத்திற்கு முன்பாக திருமணம் நடந்ததா அல்லது அதற்கு பின்னிட்டு திருமணம் நடந்தது என்றால் அது ஞாபகம் இல்லை. பொதுவாக அடமானக் கடன் பத்திரத்தில் எந்த நோக்கத்திற்காக கடன் பெறப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்வது வழக்கம் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.த.சா.ஆ7 அடமானக் கடன் பத்திரத்தை நான் படித்துப் பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். பி.தசா.ஆ7 அடமானக் கடன் பத்திரத்தில் பக்கம் 7ல் " என் குடும்ப செலவுக்காகவும் என்னுடைய பழைய கடன்களை பைசல் செய்வதற்காக வும் வேண்டி தங்களிடம் ரொக்கமாக பெற்றுக்கொண்ட தொகை ரூ.50,000/– " என்று தான் குறிப்பிடப்பட்டுளள்து என்றால் சரிதான் ஆனால் அது திருமணத்திற்காகத் தான் வாங்கப்பட்டது. நான் உண்மையில் திருமணத்திற்காக வாங்கியிருந்தால் திருமண செலவுக்கு என்று குறிப்பிட்டு எழுதியிருப்போம் தற்போது வழக்கிற்காக நான் திருமண செலவுக்காக வாங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஒரு பெண்ணுக்கு திருமணம் செய்து வைப்பது அந்த பெற்றோர்களின் தார்மீகக் கடமை என்றால் சரிதான். அடமான வழக்கு என் பெயரிலோ அல்லது வாதிகள் பெயரிலோ தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி சித்ரா அவருடைய கணவர் குமார் பெயரில் 15 சென்ட் மனையை எனது தந்தை 1ம் பிரதிவாதி துரைராஜ் 8.11.2006ல் வாங்கிக்கொடுத்தார் என்று எனது எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லியுள்ளேன். 1ம் பிரதிவாதி, 5ம் பிரதிவாதி விற்பனை செய்த விவரம் எனக்கு நேரிடையாக தெரியுமா என்றால் பின்னிட்டு தான் தெரியும். விற்பனை செய்த மற்றும் அடமானம் செய்யப்பட்ட வழக்கு சொத்துக்களில் எனக்கும் பங்குள்ளது வாதிகளுக்கும் பங்குள்ளது என்று தான் எனது வாதம் என்றால் சரிதான். வாதிகள் கோரியவாறு தாவா தீர்ப்பாக வேண்டியது என்றால் நான் போட்ட நகை மற்றும் சொத்தில் எனக்கு பாகம் கொடுத்தால் அவர்களுக்கு பாகம் கொடுக்க எனக்கு ஆட்சேபணை இல்லை. நான்

நகை போட்டதாக சொல்வது பொய் என்றாலும் வாதிகளுக்கு அவர்களது கணவர்கள் பெயரில சொத்துக்கள் வாங்கி கொடுத்தாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-.A. Tamilselvan, M.L.,

Principal Subordinate Judge ,
Villupuram